கூனற் குரங்குகள் போல - உடல்
குன்றி யிருந்திடல் ஆமோ?-அவ
மானமி தென்ன விடுப்பீர்- நிதம்
மார்பு நிமிர்ந்து நடப்பீர்.

கட்டையும் வெட்டுதல் வேண்டும் - அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும் - சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும் - ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும்.

பொய்ம்மை புனைந்துரை யாடீர்- இகழ்
பூனைக் குணந்தனைத் தேடீர் - உயர்
மெய்ம்மை யினுக்குண்டு மேன்மை - வேறு
மேதினி யில்இலை ஆண்மை.

மல்லர் உடலுரம் வேண்டும் - உயர்
மார்பும் அகன்றிடல் வேண்டும் – மிக
நல்லவர் என்றுல கேத்த - நிதம்
நன்மைகள் நாடிடல் வேண்டும்.

சற்குணங் கள்பல பெற்றார் - வித்யா
சாகரர் என்னும்அக் கற்றார் - அவர்
பொற்குணம் யாவும் பெறுவோம் - புவி
போற்றும் புகழும் உறுவோம்.

கற்று வல்ல புலவர் பலரும்
கைகள் கூப்பித் தொழுவார் - ‘இவள்
பெற்ற பேறு யாவர் பெறுவார்?’
என்று கூறிப் புகழ்வார்.

ஒருநாள் அவ்வை ஊர்கள் பலவும்
உழன்று வருந்தி இளைத்தே-வழி
வருவாள் அவளோர் வனத்தின் இடையே
வந்து மிகவும் களைத்தே,

அருகே இருந்த அரிய நாவல்
மரத்தின் நிழலை அடைந்தாள்;- நீர்
பருக வேண்டிப் பலவும் எண்ணிப்
பெரிதும் உள்ளம் உடைந்தாள்.

மரத்தின் மேலோர் சிறுவன் கனிகள்
பறித்தல் கண்டு மகிழ்ந்தாள்; - அவள்
உரத்துக் கூவித் தனக்கும் சிறிதே
உலுக்கிப் போடப் புகழ்ந்தாள்.

‘சுட்ட பழமோ? சுடுதல் இல்லாப்
பழங்கள் தரவோ? சொல்லாய் - நின்
இட்டம் உரைப்பின் ஈவேன் உனக்கே
இயம்ப வேண்டும் நல்லாய்.’

